1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற இருப்புப் பாதைகளை அகல இருப்புப் பாதைகளாக மாற்றுவது என்று சொன்னால் வருவாயைப் பொறுத்துத் தான் மாற்றமுடியும், சிக்கனம் உள்ளதாக இருக்குமா என்று பார்த்துதான் செய்ய முடியும் என்று சொல்கிறது மத்திய அரசு. மாண்புமிகு அங்கத்தினர் சொல்வது போல் எந்தக் கருத்தும் இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அண்மையிலே மத்திய ரயில்வே அமைச்சர் திரு. மிஸ்ரா அவர்கள் இங்கே விஜயம் செய்தார்கள். அவர்களோடு என்னென்ன பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. என்ன முடிவுகள் எடுக்கப் பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்களை நான் சந்திக்கவில்லை.

நெல்லை மாவட்டத்திலுள்ள கோட்ட நிலநீர் பொறியாளர் அலுவலகம்

*106 வினு—**திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் Tamil Nadu Ground-Water Engineering Division நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (Executive Engineer) எப்பொழுது திறக்கப்பட்டது?

(இ) அந்த அதிகாரி தன் கீழ் வேலை பார்க்க எந்தெந்த வேலையாட்களை நியமனம் செய்திருக்கிறுர்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) 4—12—1971 அன்று தொடங்கப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட சிப்பந்திகள் திருநெல்வேலி நிலநீர்க் கோட்டம் நிலநீராளர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

1. படிவரைவாளர்	1
2. நீலப்படிவரைவாளர்	1
3. கடைநிலை ஊழியர்கள்	7

4.	காவல்காரன்	4
5.	இரசாயன உதவியாளர்	1
6.	பணி உதவியாளர்கள்	7
7.	உதவி துளையர்கள்	1
8.	உதவியாளர், முதல்நிலை	18
9.	உதவியாளர், இரண்டாம்நிலை	13
10.	வடிவரைவாளரும் களப்பணியாளரும்	1
11.	ஓட்டுநர் (பெரிய ஊர்திகள்)	3
12.	ஓட்டுநர் (சிறிய ஊர்திகள்)	4
13.	சுத்தம் செய்பவர்	1

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, வேலை நியமனம் செய்யப்பட்டவர்களில் சிலபேர் வேலைதேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் தேர்வு செய்யப்படவில்லையென்று அரசுக்கு ஏதாவது புகார் வந்ததா? அரசு அதன்மேல் எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கனவே, எல்லா வேலைகளுக்கும் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் தான் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கத்தினர் சொல்வதுபோல் ஏதேனும் புகார் இருந்து, அதுபற்றி குறிப்பு தருவாரானால், அரசு விசாரிக்கும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இந்த கிரவுண்ட் வாட்டர் இன்ஜினீயரிங் டிவிசனிலே நாம் கிரவுண்டில் வாட்டர் இருக்கிறதா என்று சோதனை செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அதற்கு ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறதா? அல்லது அவர்கள் எந்தவிதமான கட்டணமும் பெறாமல் சோதனை செய்து தண்ணீர் இருக்கிறது என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கட்டணம் இல்லையென்று கருதுகிறேன். தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்துக் கொடுக்கலாம்.